**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC NO. 200 / 2016** |
| **Deposition of witness for** | : | **PW : 6** |
| **Name** | : | திரு. குமார் |
| **Father's / Husband's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **10.08.2022**

**முதல் விசாரணை :**

நான் மேலூர், கொடுக்கம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். டிரைவராக வேலை செய்கிறேன். ஆஜர் எதிரிகளைத் தெரியும். கடந்த 2005 ம் ஆண்டு ஜெயலெட்சுமிக்கும் கல்யாணம் ஆனது. மாப்பிள்ளை பெயர் தெரியாது. நான் பெங்களுரில் வேலை செய்கிறேன். திருமணத்திற்கு பிறகு ஜெயலெட்சுமிக்கு 3 வயதில் குழந்தை இருந்து. அதன் பிறகு ஜெயலெட்சுமிக்கும் அவரது கணவரக்கும் வரதட்சணை சம்பந்தமாக பிரச்சனை இருந்து வந்தது. ஜெயலெட்சுமி எனக்கு தூரத்து சொந்தம். ஜெயலெட்சுமி எனக்கு அவரது அப்பா வழியில் எனக்கு சொந்தம். ஜெயலெட்சுமிக்கு திருமணத்தின் போது, 25 பவுன் நகையும், பைக் கொடுத்தார்கள். மற்ற ஆடம்பர பொருட்களும் சீர்வரிசையாக கொடுத்தார்கள். ஜெயலெட்சுமிக்கும் அவரது கணவருக்கும் என்ன சண்டை என்று தெரியாது. 3 வயதில் ஒரு குழந்தை இருந்தது. அந்த குழந்தையை அண்டாவிற்குள் கவிழ்த்து வைத்திருந்தார்கள். அந்த

சம்பவம் மட்டும் தான் எனக்குத் தெரியும். 2011 ம் ஆண்டு குழந்தையை அண்டாவிற்குள் கவிழ்த்தி வைத்திருந்த போது நான் பார்த்தேன். நாங்கள் சென்று தான் அண்டாவில் இருந்து குழந்தையை எடுத்தோம். அதன் பிறகு பஞ்சாயத்து பேசி முடித்ததாக சொன்னார்கள். நான் பஞ்சாயத்திற்கு போகவில்லை. போலிசார் என்னை விசாரித்தார்கள். அப்போதும் நான் இதைத்தான் சொன்னேன்.

**<u>எதிரிகள் தரப்பில் கு.வி.</u>**

ஜெயலெட்சுமிக்கு திருமணத்தின் போது போட்ட நகை மற்றும் இதர பொருட்கள் பற்றி எனக்கு நேரடியாகத் தெரியாது. கணவன் மனைவிக்கு இடையே என்ன பிரச்சனை ஏற்பட்டது என்று தெரியாது. நான் பெங்களுரில் சுமார் 10 வருடங்களாக உள்ளேன். அங்கேயே தங்கி வேலை பார்க்கிறேன். எனது குடும்பம் மட்டும் இங்கே உள்ளது. நான் மாதத்திற்கு ஒரு முறை வந்துபோவேன். எனது தகப்பனார் பெயர் அடியான் இல்லை என்றால் எனது தகப்பனார் பெயர் அடியான் அம்பலம் ஆகும். அடியான் என்ற பெயருக்கும் எனது தகப்பனாருக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வாக்காளர் பெயர் பட்டியலில் எனது தகப்பனார் பெயர் அம்பலம் என்று மட்டும் தான் உள்ளது என்றால் சரிதான். எனது தகப்பனார் பெயர் அம்பலம் தான். எனது தகப்பனார் பெயர் அடியான் என்ற பெயரை நான் போலிசார் விசாரணையின் போது சொல்லவில்லை. குழந்தையை அண்டாவில் வைத்து தூக்கியது, எந்த தேதி, என்ன நேரம் என்று எனக்குத் தெரியாது. போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை என்றாலும் நான் குழந்தையை அண்டாவில் இருந்து தூக்கினேன் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஜெயலெட்சுமியின் தகப்பனார் எனது உறவினர் என்பதால் எனக்கு

தெரியாமல் இந்த வழக்கில் எனது பெயரை சாட்சியாக போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் முன்பாக இந்த வழக்கின் எந்த வித சம்பவமும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,
மதுரை